1973 பிப்ரவரி 8]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பெரும்பாலும் இப்பொழுது எக்ஸ்டென்ஷன் தருவதில்லை, ரீஎம்ப்ளாய்மெண்ட்டும் தருவதில்லை. அரசினர் பள்ளிகளில் பணியாற்றுகின்றவர்களுக்கு ஓய்வுபெறும் வயது 58 ஆக கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. அரசினர் பள்ளிகளிலே பணியாற்றியவர்கள், அதற்குப் பிறகு தனியார் பள்ளிகளிலே 60 வயது வரையிலோ அதற்கு மேலோ பணியாற்றக்கூடிய நிலைமை இருக்கிறது. எனவே தனியார் பள்ளிகளிலும் 58 வயதாக நிர்ணயிக்கக் கூடிய ஏற்பாட்டை அரசாங்கம் பரிசிலித்து வருகிறது. அப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டால் நிலைமை ஓரளவுக்கு சௌகரியமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மாயூரம் பெண்கள் கல்லூரி

* 65 வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் அரசினர் பெண்கள் கல்லூரியில் பட்டப்படிப்புக்கான வகுப்புக்கள் எப்போது துவக்கப்பட இருக்கின்றன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாயூரம் அரசினர் மகளிர் கல்லூரியில் சரித்திரப் பாடத்தில் பி.ஏ. பட்ட வகுப்பு 1971-72-ம் ஆண்டே துவக்கப் பட்டுள்ளது. இட வசதியின்மை காரணமாக மற்ற பட்ட வகுப்புகள் துவக்க இயலவில்லை.

நெல்லை மாவட்டத்தில் கனிவளங்கள்

71 வினு—திரு. தி. சி. அ. சிவப்பிரகாசம் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் எந்தெந்த இடங்களில் என்னென்ன கனிவளங்கள் கிடைக்கின்றன என்று ஆராய்ச்சி செய்யப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : விவர அறிக்கை ஒன்று@ அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

நீலகிரி மலையில் கிடைக்கும் கனிப்பொருள்கள்

* 72 வினு—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மலைகளில் கிடைக்கும் முக்கிய கனிப்பொருட்கள் தற்போது எவை எவை?

@ 602 ஆம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.